வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 21.5.2025 நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

நாட்டில் அம்ருத் பாரத் நிலையங்களாக மறு மேம்பாடு செய்யப்பட்டுள்ள, 103 ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை, ராஜஸ்தான் மாநிலம் பிகானேரில் இருந்து திறந்து வைக்கிறார்.

**அம்ருத் பாரத் நிலையங்கள்** திட்டத்தின் கீழ், புதுச்சேரியின் மாகே ரயில் நிலையத்தில், பயணிகளுக்கான பல்வேறு நவீன வசதிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

இன்று முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி நினைவு நாள், புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், தீவிரவாத எதிர்ப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டது.

**ஆபரேஷன்** சிந்தூர் நடவடிக்கை குறித்து வெளிநாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்கான முதலாவது அனைத்துக் கட்சிக் குழுவினர், இன்று, முதல் கட்டமாக, இந்தோனேசியாவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

மோடி-பிகானேர்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அம்ருத் பாரத் நிலையங்களாக மறு மேம்பாடு செய்யப்பட்டுள்ள, 103 ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை, ராஜஸ்தான் மாநிலம் பிகானேரில் இருந்து திறந்து வைக்கிறார். ரயில்வே, சாலை, மின்சாரம், குடிநீர், மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி தொடர்பான பல்வேறு திட்டங்களையும் அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு 26 ஆயிரம் கோடி ரூபாயாகும்.

மத்திய அரசின் **அம்ருத் பாரத் நிலையத்** திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் மொத்தம் ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள், பயணிகளுக்கான பல்வேறு நவீன வசதிகள் அடங்கியதாக தரம்

உயர்த்தப்பட்டு, பிராந்திய கலை-கலாச்சார அம்சங்களுடன் கூடிய நகர் மையங்களாக மறுமேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இதில் பணிகள் முடிக்கப்பட்டு, நாளை பிரதமரால் திறந்து வைக்கப்படும் 103 அம்ருத் பாரத் நிலையங்களில் அதிகபட்சமாக 19 ரயில் நிலையங்கள் உத்தரபிரதேஷ் மாநிலத்தில் அமைந்துள்ளன. அதற்கு அடுத்தபடியாக குஜராத் மாநிலத்தின் 18 ரயில் நிலையங்களும், மகாராஷ்டிர மாநிலத்தின் 15 ரயில் நிலையங்களும், புதிய அம்ருத் பாரத் நிலையங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில், **சென்னை பரங்கிமலை**, ஸ்ரீரங்கம், விருத்தாச்சலம், சிதம்பரம், திருவண்ணாமலை உட்பட 8 அம்ருத் பாரத் ரயில் நிலையங்களும் நாளை திறந்து வைக்கப்படும்.

*மாகே*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை திறந்து வைக்கும் **அம்ருத் பாரத் நிலையங்களில்**, புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட மாகே ரயில் நிலையமும், ஒன்றாகும்._இத்திட்டத்தின் கீழ், மாகே ரயில் நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய வசதிகள் குறித்து ஒரு செய்தி தொகுப்பு........

*மாகே*

அம்ருத் பாரத் நிலையங்கள் திட்டத்தின் கீழ், மாகே ரயில் நிலையத்தில், நவீன காத்திருப்புக் கூடம், தரமுயர்த்திய கழிவறைகள், மேம்பட்ட நடைமேடைக் கூரை உட்படப் பல்வேறு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகள் உட்பட அனைவரும் ரயில் நிலையத்தை எளிதாக அணுகவும், ரயில்நிலைய பகுதிக்குள் எளிதாக நடமாடவும் ஏதுவாக, புதிய முக மண்டபம், மற்றும் 2-ஆவது நுழைவு வாயில் கட்டப்பட்டுள்ளது. இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்த, ஏழாயிரம் சதுரமீட்டர் பரப்பளவில், தனித் தனியே பார்க்கிங் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தரைப் பரப்பில் கோட்டா கற்கள் பதிக்கப்பட்டு, மேம்படுத்திய மின் விளக்குகள், மற்றும், புதிய அறிவிப்பு பலகைகளும் நிறுவப்பட்டுள்ளன. மாகே ரயில் நிலையத்தின் மதில் சுவரில் செங்குத்து வகைத் தோட்டம் உள்ளிட்ட அழகியல் அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதுகுறித்து, பாலக்காடு ரயில்வே கோட்ட, முதுநிலை கோட்ட நிதி மேலாளர் திரு ஃபெபின் பிலிப் கூறுகையில்...........

மாகே ரயில் நிலையத்தில், விரிவான தர மேம்பாட்டு பணிகளின் மற்றொரு பகுதியாக கழிவுநீர் வடிகால் வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*ராஜீவ்- மோடி*

இன்று, முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி நினைவு நாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி ஆகியோர், புதுடெல்லி வீர்பூமியில் உள்ள ராஜீவ்காந்தி சமாதியில் மலர் அஞ்சலி செலுத்தினர்.

*ராஜீவ்காந்தி* (12)

புதுச்சேரியில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, மற்றும், அதிகாரிகள், ராஜீவ்காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அனைத்து மத பிரார்த்தனையும், தேச பக்தி பாடல்களும் இடம் பெற்றன. இன்று ராஜீவ் காந்தி நினைவு நாள், தீவிரவாத எதிர்ப்பு தினமாகவும் கடை பிடிக்கப்படுவதை ஒட்டி, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும், தீவிரவாத எதிர்ப்பு உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். காங்கிரஸ் சார்பில், **ராஜீவ் ஜோதியுடன்** அக்கட்சியினர் ஊர்வலமாக வந்து, அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மா ியாதை செலுத்தி, தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றனர்.

காரைக்காலில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், குடிமை பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன் தலைமையில், ராஜீவ் காந்தியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. தீவிரவாத எதிர்ப்பு உறுதி மொழியும் ஏற்கப் பட்டது.

ஏனாமில், ஃபெரி சாலை மற்றும் ராஜீவ் கடற்கரைப் பூங்காவில் உள்ள, ராஜீவ்காந்தி சிலைகளுக்கு, மண்டல நிர்வாக அதிகாரி திரு ஆர் முனுசாமி மற்றும் அதிகாரிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு தீவிரவாத எதிர்ப்பு உறுதி மொழி செய்து வைக்கப்பட்டது.

**ஆபரேஷன் சிந்தூர்** நடவடிக்கை பற்றிய, இந்தியாவின் **தூதரகப் புறவீச்சு** முயற்சிகளின் கீழ், அரசால் அமைக்கப்பட்டுள்ள, 7 அனைத்து கட்சிக் குழுக்களில் முதலாவதாக, ஜேடியு நாடாளுமன்ற உறுப்பினர் திரு சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழுவினர், 5 நாடுகளுக்கான பயணத்தின் முதல் கட்டமாக, இன்று இந்தோனேசியாவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர். தொடர்ந்து, மலேசியா, தென்கொரியா, ஜப்பான்,சிங்கப்பூர் நாடுகளுக்கும் இவர்கள் சென்று, தீவிரவாதத்தை அதன் எல்லா வடிவங்களிலும் எதிர்ப்பதில், இந்தியா பின்பற்றி வரும் உறுதியான அணுகுமுறை குறித்து எடுத்துக் கூற உள்ளனர். பயணத்தை தொடக்கும் முன்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஜா, புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசுகையில், பாகிஸ்தானில், **தீவிரவாதமே அரசுக் கொள்கையாக** இருப்பதாகவும், தீவிரவாதத்தை பாகிஸ்தான் ஆதரிப்பது பற்றிய விவரங்களை, தாங்கள் உலகிற்கு எடுத்துக் கூற உள்ளதாகவும், தெரிவித்தார். இக்குழுவைத் தொடர்ந்து, சிவ சேனா எம்பி திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான அனைத்துக் கட்சி குழுவினரும், இன்று, UAE, லைபீரியா, காங்கோ, சியாரா லியோன் ஆகிய நாடுகளுக்கு புறப்பட்டுச் செல்கின்றனர்.

*பரம்வீர் சக்ரா*

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், பரம்வீர் சக்ரா விருது பெற்ற **நாயப் சுபேதார்** பாணா சிங் குறித்து ஒரு தொகுப்பு …………..

*பரம்வீர் சக்ரா*

ஜம்முவைச் சேர்ந்த நாயப் சுபேதார் பாணா சிங், 1969-ஆம் ஆண்டு ஜனவரியில், 8-ஆவது ஜம்மு-காஷ்மீர் Light Infantry படைப்பிரிவில் சேர்ந்தவர் ஆவார். 1987-ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் 8-ஆவது ஜம்மு-காஷ்மீர் Light Infantry படைப்பிரிவினர், **சியாச்சின்** பகுதியில், பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இப்பகுதியில், ஏராளமான பாகிஸ்தானியர்கள் ஊடுறுவி இருப்பதாகத் தெரிய வந்ததால், ஊடுறுவல்காரர்களை வெளியேற்ற வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு இதற்கென சிறப்பு பணிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில், பாணா சிங் தாமாகவே முன்

வந்து தம்மை இணைத்துக் கொண்டார். 6 ஆயிரத்து 500 மீட்டர் உயரமுள்ள மலைப் பகுதியில் பாகிஸ்தானியர்கள் ஊடுருவல் செய்திருந்தனர். இருபுறமும் 457 மீட்டர் உயரம் உள்ள பனிச் சுவர்களுக்கு இடையே, கொஞ்சமும் அணுக முடியாத பனியாற்றுக் கோட்டை போன்ற இடத்தில், எதிரிகளின் நிலை அமைந்திருந்த போதிலும், பாணா சிங், அபார தலைமைத் துவம் மற்றும் துணிச்சலுடன், அபாயகரமான மலைப் பாதை வழியாக தமது வீரர்களை இட்டுச் சென்றார். பனிக் குழு வீரர்கள் இறுதியில் எதிரிகளை நெருங்கி சுற்றி வளைத்தனர். பாணா சிங், எதிரிகள் அமைத்திருந்த அகழிகளுக்கு இடையே, கையெறி குண்டுகளை வீசிய வண்ணமும், துப்பாக்கியால் சுட்ட படியும் தொடர்ந்து முன்னேறி, ஊடுறுவல் காரர்களின் அனைத்து நிலைகளையும் அழித்து அகற்றிய விதம், சகவீரர்களுக்கு பேரூக்கமாக அமைந்தது. அதி பாதகமான சூழலுக்கு இடையிலும் நாயப் சுபேதார் பாணா சிங் வெளிப்படுத்திய துணிச்சல் மற்றும் தலைமைப் பண்பிற்காக, அவருக்கு, பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. பாணா சிங்கின் துணிச்சலுக்கு, நாடு தலை வணங்குகிறது.

கல்வி வாகனம்

புதுச்சேரியில் கல்வி நிறுவனங்களின் வாகனங்களை ஆய்வு செய்வதற்கான போக்குவரத்து துறையின் சிறப்பு முகாம், வரும் 31, ஜூன் 1 ஆகிய தேதிகளில், மேட்டுப் பாளையம் கனரக வாகனங்கள் முனையத்தில் நடைபெற உள்ளது. மாணவ-மாணவிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, மோட்டார் வாகன சட்டம் மற்றும் உச்சநீதிமன்ற நெறிமுறைகளை அமல்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்முகாமின் போது, அனைத்து கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் தொள்ளாயிரம் வாகனங்கள், ஆய்விற்கு உட்படுத்தப்படும் என போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

வானிலை

தென்மேற்கு பருவமழை, கேரளத்தில் அடுத்த 3 நாட்களில் தொடங்க வாய்ப்புகள் இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கர்நாடக கடற்கரைக்கு அப்பால் அரபிக் கடலில் இன்று காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகலாம் என்றும் அதற்கடுத்த 36 மணி நேரத்தில் இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளிமண்டல கீழடுக்கு சுழற்சி உள்ளிட்ட

காரணங்களால் தமிழகத்திலும் புதுச்சேரி- காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் நீலகிரி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலத்த சூறாவளி காற்று வீசுவதற்கான வாய்ப்பு காரணமாக, மீனவர்கள் வரும் 25-ஆம் தேதி வரை ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கும், தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதிகளுக்கும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் 15 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 1 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு மும்பையில் நடைபெறும் போட்டியில், மும்பை-டெல்லி அணிகள் மோத உள்ளன. டெல்லியில் நேற்று நடைபெற்ற போட்டியில், ராஜஸ்தான் அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில், சென்னை அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*கைலாஷ் மானசரோவர்*

இவ்வாண்டு கைலாஷ் மானசரோவர் யாத்திரை மேற்கொள்ள, 750 பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இதற்கான ஆன்-லைன் குலுக்கல் நடைமுறைகள், வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்த்தன் சிங் முன்னிலையில், புதுடெல்லியில், இன்று நடைபெற்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட யாத்ரிகர்கள், தலா 50 பேர் அடங்கிய 15 குழுக்களாக பிரிக்கப்பட்டு, அடுத்த மாதம் 30-ஆம் முதல், ஆகஸ்டு 25-ஆம் தேதி வரையிலான கால கட்டத்தில், ஒவ்வொரு குழுவாக யாத்திரைக்கு அனுமதிக்கப்படுவர். மொத்தம் உள்ள 15 குழுக்களில், 5 குழுக்கள், லிப்புலேக் மார்க்கத்திலும், 10 குழுக்கள், நாதுலா மார்க்கத்திலும், புனிதப் பயணம் மேற்கொள்ளும் என அறிவிக்கப் பட்டுள்ளது. கைலாஷ் மானசரோவர் யாத்திரையை சுமுகமான முறையில் பாதுகாப்பான விதத்தில் பயணிகள் மேற்கொள்ள, விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, அமைச்சர் திரு கீர்த்தி வர்த்தன் சிங் தெரிவித்துள்ளார். யாத்திரையின் போது, இந்தோ-திபேத்திய எல்லைக் காவல் படையினர் பாதுகாப்பு பணியில்

ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கொரோனா உள்ளிட்ட காரணங்களால் ஏற்பட்ட ஐந்தாண்டு இடைவெளிக்குப் பின்னர், இவ்வாண்டு, கைலாஷ் மானசரோவர் யாத்திரை மேற்கொள்ளப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

நக்சலைட்

ஒடிசா மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட **அபூஜ்மார்** வனப்பகுதியில் இன்று, நக்சலைட்டுகளுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், முன்னணி நக்சலைட் தலைவர் உட்பட, குறைந்தது 20 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இப்பகுதியில் நக்சலைட் நடமாட்டம் இருப்பதாக உளவு தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து கூட்டு பாதுகாப்பு படையினர் கடந்த 2 நாட்களாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். இதில் இன்று ஏற்பட்ட மோதலில் பாதுகாப்ப படை வீரர் ஒருவருக்கும் காயம் ஏற்பட்டது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டில் அம்ருத் பாரத் நிலையங்களாக மறு மேம்பாடு செய்யப்பட்டுள்ள, 103 ரயில் நிலையங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை, ராஜஸ்தான் மாநிலம் பிகானேரில் இருந்து திறந்து வைக்கிறார்.

**அம்ருத் பாரத் நிலையங்கள்** திட்டத்தின் கீழ், புதுச்சேரியின் மாகே ரயில் நிலையத்தில், பயணிகளுக்கான பல்வேறு நவீன வசதிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

இன்று முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி நினைவு நாள், புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், தீவிரவாத எதிர்ப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டது.

**ஆபரேஷன்** சிந்தூர் நடவடிக்கை குறித்து வெளிநாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்கான முதலாவது அனைத்துக் கட்சிக் குழுவினர், இன்று, முதல் கட்டமாக, இந்தோனேசியாவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

------------------------------------